ஸ்ரீ

அழகியமணவாளதாசர்

என்கிற திவ்யகவி

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

Acc. NO. 2847

அருளிச்செய்த

திருவரங்கத்தூசற்றிருநாமம்

என்னும்

ஸ்ரீரங்கநாயகர் ஊசற்றிருநாமமும்,

அவர் திருப்பேரர் ஆகிய

கோனேரியப்பனையங்கார் அருளிச்செய்த

ஸ்ரீரங்கநாயகியார் ஊசற்றிருநாமமும்.

௪-ம் பதிப்பு.

---

289 THUMBOO CHETTY ST. MADRAS

இஃது,

ஊ-புஷ்பரதசெட்டியாரால்

கலாரத்நாகரம்

என்னும் தமது அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

சென்னை:

1891.

ஸ்ரீராமஜயம்.

அழகியமணவாளதாசர்

என்கிற திவ்யகவி

பிள்ளைப்பெருமாளையங்கார்

சரித்திரம்.

கருவிலே திருவுடையராய்த் தேறு நான்மறை வேதியர் குலதிலகராய் அவதரித்துப் பிள்ளைப்பெருமாள் என்னுந் திருநாமங்கொண்டு வேதவேதாங்கங்களில் நிபுணரானதே யன்றிப் பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளில் ஆழ்வார்கள் அருளிச்செயல்களும் நாதயாமுநயதிவராதிகளாகிற ஆசாரியர்கள் அருளின ரஹஸ்யார்த்தங்களும் வல்லராய்ப் பெயருகிற இவர்,

"வாழ்விப்பா னெண்ணமோ வல்வினையி லின்னமென்னை
ஆழ்விப்பா னெண்ணமோ வஃதறியேன்—தாழ்விலாப்
பாடலழ கார்புதுவைப் பட்டர்பிரான் கொண்டாடும்
கூடலழ காநின் குறிப்பு."

என்று அத்தியவசித்துத் திருமலைநாயகர் மதுரையில் அரசாட்சிசெய்கிறகாலத்தில் அவரது ராஜாங்க சேவைகளில் ஒரு ராயசமென்னும் உத்தியோகம் பெற்றுத் தமக்கு உசிதமான வருணாசிரம தருமங்களில் வழுவாது காலக்ஷேபராய்க் "குழலிசை யளிமேவு கூரம் வந்தருள் குருபர னிருபாத போதடைந்த" திடசித்த ராகையாலே,

"வானிட்ட கீர்த்தி வளர்கூரத் தாழ்வான் மகிழவந்த
தேனிட்ட தார்நம் பெருமாள் குமாரர் சிவனையயன்
றுனிட்ட சாபந் தொடைத்தா ளரங்கர்சங் காழிபுயம்
நானிட்ட னென்றருள் பட்டர்பொற் றுட்கதி நந்தமக்கே."

பெருப்பேறென்று ஆசாரியருசி கனக்க வுடையராய் வருகிறநாளில் ஒருநாள், ராஜசபையில் உத்தியோக நடத்துகிறவர்கள் நடுவே தாமுங் கூடவிருந்து காரியஞ்செய்து வருகிறபோது, தமது உத்தரீயத்தை இரண்டுகையிலுங்கொண்டு "கிருஷ்ண கிருஷ்ண" என்று தேய்த்தனர்.

அதுகண்ட சிலர், "ஐயங்காரே! நீர் நிரந்தரம் பகவத்குணனுபவ சிலரே சரி, ஆனாலும் உமது உத்தரீயத்தை இங்ஙன் ஏன் செய்தீர்" என்று வினவ, அதற்கு நேர்விடை "ஆம், அருகுபந்தத்தின் சுவாலை தாவியெரிந்த திருத்திரை அவிந்து நம்பெருமாளும் திருத்தேரி லெழுந்தருளுகிறார்" என்றார். அங்ஙனம் கேட்டவர்கள், "திருவரங்கம் பெரியகோயில் திருவீதியில் நம்பெருமாள் திருத்தேர் உற்சவங்கண்டருளுகிறது உமக்கு எங்ஙனே தெரியலாயிற்று" என்று நகைத்து, ஏதோ உமக்கிங்ஙனே ஒரு பிரமமுண்டா யிருக்கிற தானல் ராஜசேவைக்கு முழுதும் விரோதமாகாதே என்றும், ஐயங்கார் விஷயத்தில் இரக்கமுள்ளவர்களா யொழிந்தனர். இங்கே திருத்தேரிலே திருத்திரையிலே பந்தத்தின் சுவாலைதாவி எரிகையில் தேரின்மேலே பெருமாளைச் சேவித்து நின்ற ஐயங்கார்கண்டு திரையைப்பற்றி உதறிக் கீழே தேய்த்து அவித்தருளினதாக அர்ச்சகர் முதலான முதலிகள் தெரிந்து உடனே தோஷபரிகாரஞ் செய்து திருத்தேர் நடாத்தி யருளினர்கள்.

பின்பு நாயகர் ஞானபக்தியுள்ளவ ராகையாலே அவருக்கு இங்குற்ற விசேஷம் தலத்தாராலே தெரிந்து ஆனந்த பரவசராய் ஐயங்காரை நோக்கி "திருத்தேருற்சவத்துக் கெங்ஙனே போயினீர்" என்ன, அதற்கு, ஐயங்கார் "எனக்கு மாநஸாநுபவமேயல்லது கோவிலுக்குப் போனதில்லை" என்ன, நாயகர் ஆக்ஷேபித்து "நீர் உற்சவத்தினன்று அங்கிருந்ததாகச் சொல்வது பொய்யோ" என்ன, அப்போது இவர் உத்தரீயத்தை 'கிருஷ்ண கிருஷ்ண' என்று தேய்த்ததுகண்ட சிலர், இங்ஙனே என்று உண்மைகூற, 'நன்று நன்று' என அதிசயித்து அன்றிரவு நித்திரைப்போதில் தாம் நம்பெருமாள் சந்நிதிக்குப் போனதாகவும் தென்றிருக் காவேரியில் ஐயங்கார் தோதவத்தித் தூமறையோராய் நிற்கக் கண்டு அவருடனே சந்நிதிக்குப்போய்ப் பெரிய பெருமாளைச்சேவித்து மீளும்போது ஐயங்காரைக் காணமல் மயங்கிக் கண்விழித்து விடிந்த பின்பு ஐயங்காரை வரவழைத்து, "நீரோ மஹானுபவராய் இருக்கிறீர், இனி என் சேவைக்குத் தக்கீரல்லீர், உமக்கு என்ன வேண்டும்" என்ன, "பெரியகோயிலில் தளிகைப் பிரசாதமும் அங்குற்ற வாசமும் வேண்டும்" என்ன, அன்று தொடங்கிச் சலவைக் கல் மண்டபப் பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் ஒரு அறையும் தளிகைப்பிரசாதமும் கிடைக்கும்படி செய்து ஐயங்காரை அனுப்பிவிட, ஐயங்காரும் அங்ஙனே யெழுந்தருளியிருந்து பெரிய கோயிலுக்குக் கலம்பகம், அந்தாதி, மாலை, ஊசல்; அழகர்திருமலைக்கு அந்தாதி; திருவேங்கடத்துக்கு மாலை, அந்தாதி; நூற்றெட்டுத் திருப்பதிக்கும் ஓரந்தாதி முதலிய பிரபந்தங்கள் அருளிச்செய்து "பாசமாமடியார்

பால்" என்கிறபடியே அநவரதாநுபவராய் வருகிறவர் ஒருநாள், தமது திருவடிகளில் சம்பந்தரானவர்களுக்கு "நமக்கு அந்திமதசை பசுமாட்டினாலே முடிவாம்" என்று தெரியச்சொல்லி, அப்படியே சக்கிரவர்த்தித் திருமகன் சேவையாய் ஸ்ரீவைகுண்டநாதர் சந்நிதியில் சேவித்துக்கொண் டிருக்கையில் ஒரு நொண்டிப்பசு வந்து தவறி அவர்மேல் விழ, அது விழுந்ததனாலாகிய துன்பத்துடனே,

"தளவ தளவ வெனச்சொல்லும் போச்சே
அளவி னெடுமூச்சு மாச்சே—முளரிக்
கரங்கால் குளிர்ந்ததே கண்ணும்பஞ் சாச்சே
இரங்கா யரங்கா வினி."

என்று திருநாட்டுக் கெழுந்தருளினாரென்பது பிரசித்தம். இன்னும் இவரது வைபவங்களெல்லாந் தெரிந்தோராலே கேட்டுணர்க.

இது
திரிசிரபுரம்
வித்வான்
கோவிந்தபிள்ளையவர்களால்
எழுதப்பட்டது.

ஸ்ரீராமஜயம்.

பிள்ளைப்பெருமாள்ஐயங்கார்

அருளிச்செய்த

ஸ்ரீரங்கநாயகர் ஊசற்றிருநாமம்.

தனியன்.

அண்டப்பந்தரிற்பற்றுகால்களாக
வறிவுவிட்டங்கரணஞ்சங்கிலிகளாகக்
கொண்டபிறப்பேபலகைவினையசைப்போர்
கொடுநரகசுவர்க்கப்பூவெளிகடம்மிற்
றண்டலிலேற்றம்மிறக்கந்தங்கலாகத்
தடுமாறியிடருழக்குமூசன்மாறத்
தொண்டர்க்காமணவாளர்பேரர்கூடித்
தொகுத்திட்டார்திருவரங்கத்தரசருளே.

காப்பு.

புதுவைநகர்ப்பட்டர்பிரான்சரண்கள்போற்றி
பொய்கைபூதன்பேயார்பாதம்போற்றி
சதுமறைச்சொற்சடகோபன்சரணம்போற்றி
தமிழ்ப்பாணன்றொண்டரடிப்பொடித்தாள்போற்றி
முதுபுகழ்சேர்மழிசையர்கோன்பதங்கள்போற்றி
முடிக்குலசேகரன்கலியன்கழல்கள்போற்றி
மதுரகவியெதிராசன்கூரத்தாழ்வான்
வாழ்வானபட்டர்திருவடிகள்போற்றி.

நூல்.

திருவாழத்திருவாழிசங்கம்வாழத்
திருவனந்தன்கருடன்சேனையர்கோன்வாழ
வருண்மாறன்முதலாமாழ்வார்கள்வாழ
வளவில்குணத்தெதிராசனடியார்வாழ
விருநாலுதிருவெழுத்தினேற்றம்வாழ
வேழுலகுநான்மறையுமினிதுவாழப்
பெருவாழ்வுதந்தருளும்பெருமாளெங்கள்
பெரியபெருமாளரங்கராடிரூசல். (க)

உயரவிட்டகற்பகப்பூம்பந்தர்கீழ
லொண்பவளக்காலிருவிழுதுபோட்ட
வயிரவிட்டத்தாடகச்சங்கிலிகளுற்றி
மரகதத்தாற்பலகைதைத்தவூசன்மீதே
தயிரிலிட்டமத்துழக்கும்வெண்ணெய்க்காடித்
தடமறுகிற்குடமாடித்தழல்வாய்நாக
மயரவிட்டன்றுடியரீராடிரூச
லணியரங்கம்பெருமாளாடிரூசல். (உ)

மீன்பூத்தவிசும்பதுபோற்றரளங்கோத்து
விரித்தநீலப்பட்டுவிதானந்தோன்ற
வான்பூத்தகலைமதிபோற்கவிகையோங்க
மதிக்கதிர்போற்கவரியிருமருங்கும்வீசக்
கான்பூத்ததனிச்செல்வன்சிலையுண்மின்னற்
கருமுகில்போற்கணமணிவாசிகையினுப்பண்
டேன்பூத்ததாமரையாண்மார்பிலாடத்
தென்னரங்கமணவாளராடிரூசல். (௩)

பூசுரரும்புரவலரும்வானநாட்டுப்
புத்தேளிர்குழுவுமவர்பூவைமாரும்

வாசவனுமலரயனுமமுவலானும்
வணங்குவானவசரம்பார்த்திணங்குகின்ருர்
தூசுடையகொடித்தடங்தேர்மானங்தோன்றச்
சுடரிரண்டும்பகல்விளக்காத்தோன்றத்தோன்றுங்
தேசுடையதிருவரங்கராடிரூசல்
சீரங்கநாயகியோடாடிரூசல். (௪)

மலைமகளுமரனுமொருவடங்தொட்டாட்ட
வாசவனுஞ்சசியுமொருவடங்தொட்டாட்டக்
கலைமகளுமயனுமொருவடங்தொட்டாட்டக்
கந்தனும்வள்ளியுங்கலங்தோர்வடங்தொட்டாட்ட
வலைமகரப்பாற்கடலுளவதரித்த
வலர்மகளுநிலமகளுமாயர்காதற்
றலைமகளுமிருமருங்கிலாடவெங்க
டண்ணரங்கமணவாளராடிரூசல். (௫)

திருவழுதிவளநாடன்பொருநைச்சேர்ப்பன்
சீபராங்குசமுனிவன்வகுளச்செல்வன்
றருவளருங்குருகையர்கோன்காரிமாறன்
சடகோபன்றமிழ்வேதங்தியர்பாடக்
கருணைபொழிமுகமதியங்குறுவேர்வாடக்
கரியகுழல்கத்தூரிநாமத்தாட
வருகிருக்குந்தேவியர்களதுகொண்டாட
வணியரங்கத்தெம்பெருமானுடிரூசல். (௬)

வையமொருபொற்றகட்டுத்தகளியாக
வார்கடலேநெய்யாகவதனுட்டேக்கி
வெய்யகதிர்விளக்காகச்செஞ்சொன்மாலை
மெல்லடிக்கேசூட்டினுன்மேன்மைபாடத்

துய்யமதிமண்டலத்தின்மறுவேயொப்பச்
சோதிவிடுகத்தூரிதிலங்குநாமச்
செய்யதிருமுகத்தரங்கராடிருசல்
ஸ்ரீரங்கநாயகியோடாடிருசல். (எ)

அன்பென்றுநன்பொருளோர்தகளியாக
வார்வமேநெய்யாகவதனுட்டேக்கி
யின்புருகுசிந்தையிடுதிரியாஞானத்
திலகுவிளக்கேற்றினனிசையைப்பாடப்
பொன்புரையும்புகழுறையூர்வல்லியாரும்
புதுவைநகராண்டாளும்புடைசேர்ந்தாட
முன்பினும்பின்பழகியநம்பெருமாடொல்லை
மூவுலகுக்கும்பெருமாளாடிருசல். (அ)

திருக்கண்டேன்பொன்மேனிகண்டேனென்ற
திகழருக்கனணிநிறமுந்திகிரிசங்கு
மிருட்கொண்டகருங்கங்குலிடையேகோவ
லிடைகழியிற்கண்டபிரானேற்றம்பாட
மருக்கொண்டகொன்றையான்மலரின்மேலான்
வானவர்கோன்முதலானோர்மகுடகோடி
நெருக்குண்டதாளரங்கராடிருசல்
நினைக்குமணவாளராடிருசல். (க)

நான்முகனைநாரணனேபடைத்தானந்த
நான்முகனுநக்கபிரானைப்படைத்தான்
யான்முகமாயந்தாதியறிவித்தேனென்
றியார்க்கும்வெளியிட்டபிரானியல்பைப்பாடப்
பான்முகமார்வளைநேமிபடைகள்காட்டப்
பாசடைகடிருமேனிப்படிவங்காட்டத்
தேன்முகமாமுளரியவயவங்கள்காட்டச்
செழுந்தடம்போலரங்கேசராடிருசல். (கo)

மருளிரியமறமிரியவினைத்துயிர்க்கு
மயலிரியவினையிரியமறையின்பாட
விருளிரியவென்றெடுத்துத்தொண்டர்தங்க
ளிடரிரியவுரைத்தபிரானிட்டம்பாட
வருளிரியவறமிரியவுலகையாண்ட
வாடகத்தோனகம்பரனென்றபிமானித்த
பொருளிரியச்சொல்லிரியமார்வங்கீண்ட
பொன்னிசூழ்திருவரங்கராடிரூசல். (கக)

அரனென்றுமயனென்றும்புத்தனென்று
மலற்றுவார்முன்றிருநாரணனேயாதிப்
பரனென்றுமறையுரைத்துக்கிழியறுத்த
பட்டர்பிரான்பாடியபல்லாண்டுபாடக்
கரனென்றமாரீசன்கவந்தனென்ற
கண்டகராருயிர்மடியக்கண்டிலங்கா
புரம்வென்றசிலையரங்கராடிரூசல்
புகழுறையூர்வல்லியோடாடிரூசல். (கஉ)

மருமாலைப்பசுந்துளவத்தொடைகளோடு
வைகறையில்வந்துதிருத்துயிலுணர்த்தித்
திருமாலைதிருவடிக்கேசூட்டிநிற்குந்
திருவண்டங்குடிப்பெருமான்சீர்மைபாடப்
பெருமாலையடைந்துலகமதிமயங்கப்
பேணுதார்படக்கதிரோன்காணுதேக
வொருமாலைபகலிலழைத்தொளித்தநேமி
யொளியுள்ளாரரங்கேசராடிரூசல். (கந)

சாரங்கத்திருவுருவஞ்செய்யபாத
கமலமுதன்முடியளவுங்கண்டுபோற்றச்
சாரங்கமுனியையூர்ந்தமலனாதி
தனையுரைத்தபாண்பெருமாடகைமைபாட

வாரங்கொள்பாற்கடல்விட்டயனாரோறி
யயோத்திநகரிழிந்துபொன்னியாற்றிற்சேர்ந்த
சிரங்கமணவாளராடிரூசல்
சிரங்காயகியோடாடிரூசல். (கச)

விழிபறித்தவெள்ளியைமாவலியைமண்ணும்
விண்ணுலகும்பறித்தகுறள்வேடத்தும்மை
வழிபறித்துமந்திரங்கொண்டன்பர்தங்கள்
வல்வினையைப்பறித்தபிரான்வண்மைபாடச்
சுழிபறித்தகங்கைமுடியடியிற்றோயத்
தொழுதிரக்குமுக்கணனுன்முகனைச்செய்த
பழிபறித்துப்பலியொழித்தாராடிரூசல்
பள்ளிகொண்டதிருவரங்காராடிரூசல். (கரு)

போதனுர்கெட்டெழுத்துநமனுரிட்ட
குற்றெழுத்தும்புனலெழுத்தாய்ப்போகமாறன்
வேதமாயிரந்தமிழுமெழுதியந்நாண்
மேன்மைபெறுமதுரகவிவியப்பைப்பாட
வோதமார்மீன்வடிவாயாமையேனத்
தருவாகியரிகுறண்மூவிராமராகிக்
கோதிலாக்கண்ணனுய்க்கற்கியாகுங்
கோயில்வாழரங்கேசராடிரூசல். (கசு)

ஆரமுதினின்பமிகுசடகோபன்சொல்
லாயிரமுந்தெரிந்தெடுத்தேயடியார்க்கோதி
நாரதனுமனமுருகவிசைகள்பாடு
நாதமுனித்திருநாமநலங்கள்பாடப்
பாரதனிற்பாரதப்போர்முடியமூட்டிப்
பகைவேந்தர்குலந்தொலையப்பார்த்தன்றெய்வத்
தேரதனில்வருமரங்காராடிரூசல்
சிரங்காயகியோடாடிரூசல். (கள)

வம்பமருஞ்சிகைமுந்நூறரித்தஞானி
வாதியனைவெல்லாளவந்தார்க்கன்பா
மெம்பெருமானார்க்கெட்டுமிரண்டும்பேசி
யிதமுரைத்தபெரியநம்பியிரக்கம்பாடத்
தும்புருநாரதர்நாதகிதம்பாடத்
தொண்டர்குழாமியல்பாடச்சுருதிபாட
நம்பெருமாடிருவரங்கராடிரூசல்
நான்முகனார்தாதையாராடிரூசல். (கஅ)

ஐங்கோலுமொருகோலுநீர்க்கோலம்போ
லழியமுனிந்தறுசமயமகற்றியெங்கள்
செங்கோலேயுலகனைத்துஞ்செல்லமுக்கோ
திருக்கையிற்கொளெதிராசன்செயத்தைப்பாடச்
சங்கோலமிடும்பொன்னித்துறையினின்றே
தவழ்ந்தேறிமறுகுதொறுந்தரளமீனு
நங்கோயினம்பெருமாளாடிரூசல்
நக்கன்மூதாதையாராடிரூசல். (கக)

அவத்தப்புன்சமயச்சொற்பொய்யைமெய்யன்
றணிமிடறுபுழுத்தான்றன்னவையின்மேவிச்
சிவத்துக்குமேற்பதக்குண்டென்றுதீட்டுந்
திருக்கூரவேதியர்கோன்செவ்விபாடப்
பவத்துக்கம்பிணிநீங்கநரகந்தூரப்
பரமபதங்குடிமலியப்பள்ளிகொள்ளு
நவத்துப்புச்செங்கனிவாய்க்கரியமேனி
நம்பெருமாளரங்கேசராடிரூசல். (உ0)

சந்தாடும்பொழிற்பூதூர்முக்கோற்செல்வன்
றன்மருகனுகியிருதாளுமான
கந்தாடைக்குலதீபன்முதலியாண்டான்
கடன்ஞாலந்திருத்தியருள்கருணைபாடக்

கொந்தாருந் துளவாடச்சிறைவண் டாடக்
குழலாடவிழியாடக்குழைக்காதாட
நந்தாடக்கதையாடத்திகிரியாட
நன்மாடத்திருவரங்கராடிருசல். (உக)

திருக்கலியனனுக்கர்திருப்பணிசெய்யன்பர்
சிரங்கான்மறையோருள்ளூர்ச்செல்வர்
தருக்குமிசைப்பிரான்மார்பாரளந்தார்பாதந்
தாங்குவோர்திருக்கரகந்தரித்துநிற்போ
ரிருக்குமுதல்விண்ணப்பஞ்செய்வோர்வீரர்க்
கிறையவர்கள்சிபுண்டரீகர்மற்றும்
பெருக்கமுள்ளபரிகரங்கடொழுதாட்செய்யப்
பிரமமாந்திருவரங்கராடிருசல். (உஉ)

உடுத்திரளோவானவர்கள்சொரிந்தபூவோ
வுதித்தெழுந்தகலைமதியோவும்பர்மாத
ரெடுத்திடுகர்ப்பூரவாரார்த்திதானோ
யாந்தெளியோமின்றுநீடிருக்கண்சாத்திப்
படுத்ததிருப்பாற்கடலுணின்றுபோந்து
பாமாலைபூமாலைபாடிச்சூடிக்
கொடுத்ததிருக்கோதையுடனாடிருசல்
கோயின்மணவாளரேயாடிருசல். (உங)

வென்றிவேற்கருநெடுங்கண்ணசோதைமுன்னம்
வேர்வாடவிளையாடும்வெண்ணெயாட்டும்
குன்றுபோனுற்றடந்தோள்வீசியாடுங்
குரவைதனைப்பிணைந்தாடுங்கோளராட்டும்
மன்றினூடுகந்தாடுமரக்காலாட்டும்
வலியரவிற்பாய்ந்தாடும்வடிவிலாட்டு
மன்றுகாணுவிழந்தவடியோங்காண
வணியரங்கராசரேயாடிருசல். (உச)

ஆரணங்களொருநான்குமன்பர்நெஞ்சு
மணிசிலம்புமடிவிடாதூசலாட
வாரணங்குழலைமடவார்கண்ணும்வண்டும்
வண்டுளவும்புயம்விடாதூசலாடக்
காரணங்களாயண்டரண்டமெல்லாங்
கமலநாபியிற்படைத்துக்காத்தழிக்குஞ்
சீரணங்குமணவாளராடிரூசல்
சீரங்கநாயகனாராடிரூசல். (உரு)

அடித்தலத்திற்பரிபுரமுஞ்சிலம்புமாட
வணிமார்பிற்கௌத்துவமுந்திருவுமாடத்
தொடித்தலத்தின்மணிவடமுந்துளவுமாடத்
துணைக்கரத்திற்சக்கரமுஞ்சங்குமாட
முடித்தலத்திற்கருங்குழலுஞ்சுரும்புமாட
முகமதியிற்குறுவேர்வுங்குழையுமாடக்
கடித்தலத்திலரைநாணுங்கலையுமாடக்
காவிரிசூழரங்கேசராடிரூசல். (உசு)

பரந்தலைக்கும்பாற்கடலுட்பசுஞ்சூற்கொண்டல்
படிந்ததெனக்கிடந்தபடிபடிமேற்காட்டி
வரந்தழைக்கவிரண்டாற்றினடுவேதோன்றி
மண்ணுலகைவாழவைத்தவளத்தைப்பாடப்
புரந்தரற்கும்பெருமாளேயாடிரூசல்
போதனுக்கும்பெருமாளேயாடிரூச
லரன்றனக்கும்பெருமாளேயாடிரூச
லணிபரங்கப்பெருமாளேயாடிரூசல். (உஎ)

உடுமாயக்கதிருதிரச்சண்டவாயு
வுலகலைப்பவடவைசுடவுததியேழுங்
கெடுமாறுதிரிதருகாலுயிர்களெல்லாங்
கெடாதுவயிற்றுள்ளிருத்துங்கீர்த்திபாட

நெடுமாயப்பிறவியெல்லாம்பிறந்திறந்து
நிலத்தோடும்விசும்போடுநிரயத்தோடும்
தடுமாறித்திரிவேனையருள்செய்தாண்ட
தன்னரங்கநாயகனாராடிரூசல். (௨௮)

முருகனுறைகுறிஞ்சித்தேன்முல்லைபாய
முல்லைநிலத்தயிர்பானெய்மருதத்தோட
மருதநிலக்கொழும்பாகுநெய்தற்றேங்க
வருபுனல்காவிரிசூழ்ந்தவளத்தைப்பாடக்
கருமணியேமரகதமேமுத்தேபொன்னே
கண்மணியேயாருயிரேகனியேதேனே
யருள்புரிவாயென்றவர்தம்மகத்துள்வைகு
மணியரங்கமாளிகையாராடிரூசல். (௨௯)

புண்டரிகத்தவன்றவஞ்செய்திறைஞ்சுங்கோயில்
புரிசடையோன்புராணஞ்செய்தேத்துங்கோயில்-
பண்டிரவிகுலத்தரசர்பணிந்தகோயில்
பரிந்திலங்கைக்கோன்கொணர்ந்துபதித்தகோயில்
மண்டபமுங்கோபுரமுமதிலுஞ்செம்பொன்
மாளிகையுந்தண்டலையுமலிந்தகோயி
லண்டர்தொழுந்திருவரங்கம்பெரியகோயி
லமர்ந்துறையும்பெருமானாராடிரூசல். (௩0)

அருவரங்கடருபராங்குசனேயாதி
யாழ்வார்கடம்பிரானாடிரூச
லிருவரங்கவொளிக்ககலாவிருளகற்று
மெதிராசன்றம்பிரானாடிரூசல்
தருவரங்கணீள்பொழில்கூரத்துவேதா
சாரியனார்தம்பிரானாடிரூசல்
திருவரங்கத்தணியரங்கத்திருமுற்றத்துத்
தெய்வங்கடம்பிரானாடிரூசல். (௩௧)

உணராதமதலையிளங்குதலைச்சொல்லை
யுளமுருகித்தந்தைதாயுவக்குமாப்போற்
றணவாமற்கற்பிப்பார்தஞ்சொற்கேட்டுத்
தத்தையுரைத்தத்தையாதரிக்குமாப்போற்
பணவாளராமுடிமேற்படியேழ்போற்றும்
பட்டர்திருத்தாட்கடிமைப்பட்டகாதன்
மணவாளதாசன்றன்புன்சொற்கொண்ட
மதிலரங்கமணவாளராடிரூசல். (௩௨)

போதாருநான்முகனேமுதலாயுள்ள
புத்தேளிர்தொழுநாதன்புவனிக்கெல்லா
மாதாரமாந்தெய்வமானநாத
னனைத்துயிர்க்குநாதனணியரங்கநாதன்
சீதாரவிந்தமலர்த்திருவினாதன்
றிருவூசற்றிருநாமமொருநாலெட்டும்
வேதாசாரியபட்டர்க்கடிமையான
வெண்மணிப்பிள்ளைப்பெருமாள்விளம்பினனே.

ஸ்ரீரங்கநாயகர் ஊசல் முற்றிற்று.

கோனேரியப்பனையங்கார்

அருளிச்செய்த

சிரங்கநாயகியார் ஊசற்றிருநாமம்.

காப்பு.

முருகூருமகிழ்மாலையணியுமார்பன்
முத்தமிழன்கவித்தலைவன்முனிவர்வேந்தன்
திருகூருமனத்திருணிக்குதயபானு
சிபராங்குசயோகிதிருநாவீறன்
அருகூருந்தன்பொருளைவழுதிநாட
னக்கமலம்பாடினானன்னமேறி
குருகூரஞ்சடகோபன்காரிமாறன்
கோகனகமலரடியின்குணங்கள்போற்றி.

நூல்.

சீராழிசிறத்தரங்கரடிகள்வாழ
நெடுமகுடப்பணிவாழக்கருடன்வாழப்
போராழிசெலுத்தியசேனையர்கோன்வாழப்
பேய்பூதன்பொய்கைமுதற்பதின்மர்வாழ
ஓராழிக்கதிர்வாழத்திங்கள்வாழ
வும்மடியார்மிகவாழவுலகம்வாழச்
சீராழிசங்குகதைசிலைவாள்வாழச்
சிரங்கநாயகியாராடிருசல். (க)

தங்கமலர்ப்பந்தரின்கீழ்ப்பதுமராகத்
தூணிறுத்தி வயிரவிட்டந்தொகுத்துமீதிற்
றங்கநெடுஞ்சங்கிலிவிட்டதின்மாணிக்கத்
தவிசுபுனைந்தலங்கரித்தவூசன்மீதின்
மங்கலநாண்டிருவாவாராடிருசல்
மதிலரங்கர்தமக்கினியாராடிருசல்

செங்கமலமாளிகையாராடிரூசல்
சீரங்கநாயகியாராடிரூசல். (உ)

கடிமலருமதுகரமுங்குழலிலாடக்
கத்தூரியுடன்வேர்வுமுகத்திலாட
நெடுவிழியுமணித்தோடுங்குழையிலாட
நேர்வளையுஞ்சூடகமுங்கரத்திலாட
வடமணியுங்கண்டிகையுந்தனத்திலாட
மாகலையுமேகலையுமருங்கிலாடத்
திடமறையும்பரிபுரமும்பதத்திலாடச்
சீரங்கநாயகியாராடிரூசல். (௩)

கலைமடந்தைவணங்கியொருவடந்தொட்டாட்டக்
கற்புடையவள்ளியொருவடந்தொட்டாட்ட
மலைமடந்தைபரிவிலொருவடந்தொட்டாட்ட
வானவர்கோன்மடைந்தையொருவடந்தொட்டாட்ட
அலர்மடந்தைநிலமடந்தையுலகம்வாழ
வருண்மடந்தைபொருண்மடந்தையழகார்நெற்றிச்
சிலைமடந்தைதிருமடந்தையாடிரூசல்
சீரங்கநாயகியாராடிரூசல். (௪)

காரணியதிருவரங்கமணவாளர்க்குக்
கண்களிப்பமனமுருகவறிவுசோர
மூரலெழப்புளகமுறப்புயம்பூரிப்ப
முகமலரமெய்குழையமோகமேற
ஆரமுதேபசுங்கிளியேமுத்தேபொன்னே
யன்னமேயென்னம்மேயழகின்பேறே
சீரியசிற்றிடையணங்கேயாடிரூசல்
சீரங்கநாயகியாராடிரூசல். (௫)

வீறுபொய்கைபூதத்தாரிருபால்ஞான
விளக்கேந்தமயிலையர்கோன்வியந்துகாண

மாறன்மறைத்தமிழ்மதுரகவிசின்றேத்த
வாழ்குலசேகரன்பாணன்கலியன்போற்ற
ஆறுசமயத்திருந்தோனருகில்வாழ்த்த
வணிபுதுவைவேதியர்பல்லாண்டுபாடத்
தேறுதொண்டரடிப்பொடிதாரடியிற்சூட்டச்
சிரங்கநாயகியாராடிரூசல். (கா)

நாதமுனிதவமாகமாறன்பாடல்
நயந்தெழுதவேதனெழுத்தழிந்தவாறும்
போதனெதிராசன்வலியாழிமன்னோர்
புயத்தெழுதக்கூற்றினெழுத்தழிந்தவாறும்
ஏதமில்கூரத்தாழ்வான்பதக்குண்டென்றே
யெழுதிடவாதியர்களெழுத்தழிந்தவாறும்
நீதில்குணத்தடியார்கடிரண்டுவாழ்த்தச்
சிரங்கநாயகியாராடிரூசல். (எ)

தருக்குடனேயுமதுதிருவுளத்துக்கேற்கத்
தங்கடங்கள்பணிவிடைகடலைமேற்கொண்டு
வருக்கமுடன்பத்துவகைக்கொத்துளோரும்
மற்றுமுள்ளபரிகரமும்வந்துசூழ
அருக்கனெனமுடிவிளங்கவழகுவீற
வண்டர்கள்பூமழைபொழியவடியார்போற்றச்
செருக்கிவிளையாடியுகந்தாடிரூசல்
சிரங்கநாயகியாராடிரூசல். (அ)

மின்றுவுகொடிமதில்சூழ்கூரவேந்தன்
வேதாசாரியனன்னையாடிரூசல்
பின்றுதபரசமயக்குறும்பறுக்கும்
பெரியநம்பியுளத்துறைவாராடிரூசல்
கந்தாடைக்குலத்தில்வருமழகோன்வாழக்
கருணைவிழிக்கடையருள்வாராடிரூசல்

செந்தாறும்பசுந்தாரும்புடையுலாவச்
சீரங்கநாயகியாராடிருசல். (கூ)

ஆரணஞ்சேர்வில்லிபுத்தூருறையூர்வாழ
வவதரித்தநாயகியாராடிருசல்
பேரணிபூணழகுடையார்தாமேயென்னும்
பெண்டுகடன்நாயகியாராடிருசல்
நாரணர்பூரணர்பெரியபெருமாளெங்க
ணம்பெருமாளுயகியாராடிருசல்
தேரணியுநெடுவீதிபுடைசூழ்கோயிற்
சீரங்கநாயகியாராடிருசல். (கo)

கோலமந்தானிலமுலவவதனுலாடுங்
கோகனகத்திருந்தாடுமன்னம்போல
மாலரங்கர்திருமேனிவண்மையாலு
மழைமுகில்கண்டுகேந்தாடுமயிலும்போல
வேலைகடைந்திடவதனிலெழுந்தபோது
வெண்டிரைமேலசைந்தாடும்வீறுபோலச்
சீலமுடன்மாணிக்கத்தவிசிலேறிச்
சீரங்கநாயகியாராடிருசல் (கக)

குடமாடிச்சீராடிவெண்ணெய்க்காடிக்
குரவைதனைப்பிணைத்தாடிக்கோளராவின்
படமாடிவிளையாடுமெக்காளந்தப்
பரமனுரத்திருந்தாடும்படியேபோல
வடமாடக்குழையாடவிடைதள்ளாட
வளையாடவிளையாடிமாலையாடத்
திடமாடக்கொடியாடத்திகழுங்கோயிற்
சீரங்கநாயகியாராடிருசல். (கஉ)

கொந்தாருங்குழலசையவாடிருசல்
குலமகரக்குழையசையவாடிருசல்

நந்தாருங்கரமசையவாடிரூசல்
நல்லியநூலிடையசைய வாடிரூசல்
சந்தாருந்தனமசையவாடிரூசல்
தரளமணிவடமசையவாடிரூசல்
செந்தாளிற்சிலம்பசையவாடிரூசல்
சீரங்கநாயகியாராடிரூசல். (கங)

கரியகுழலசையுமெனவரிவண்டார்ப்பக்
கழையணிதோளதிருமெனத்தொடிகளார்ப்ப
மருமலர்க்கையலங்குமெனவளைகளார்ப்ப
வடிவமெல்லாம்வருந்துமெனமறைகளார்ப்ப
இருமுலைகள்குலுங்குமெனவடங்களார்ப்ப
விடையொசிந்தேயிறுமெனமேகலைகளார்ப்பத்
திருவடிகள்சிவக்குமெனச்சிலம்புமார்ப்பச்
சீரங்கநாயகியாராடிரூசல். (கச)

மேவியபங்கயன்றவஞ்செய்திறைஞ்சுங்கோயில்
வேணியரன்புராணநூல்விளம்புங்கோயில்
தாவுதிரைக்காவேரிபுடைசூழ்கோயில்
சந்திரவாவியின்மருங்குதழைத்தகோயில்
பாவளர்சத்தாவரணமுடையகோயில்
பணியணிசேரோங்காரமானகோயில்
தேவர்தொழுந்திருவரங்கம்பெரியகோயில்
சீரங்கநாயகியாராடிரூசல். (கரு)

தாரங்கத்திருவரங்கர்க்கூசல்பாடிச்
சாத்திரன்பேரனென்னுந்தன்மையாலும்
அருங்கண்டேதெளியுமவன்சொல்பாட்டி
னதிசயத்தையறிவனென்னுமாசையாலும்
பாரெங்கும்புகழ்வேதவியாசபட்டர்
பதம்பணிகோனேரியப்பன்புன்சொல்லாகச்
சீரங்கநாயகியார்க்கொருபத்தாறு
திருவூசற்றிருநாமஞ்செப்பினனே. (கசு)

முற்றிற்று.